**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு. எம்.தனபால், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**2023–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 6 ஆம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No.341/2022**

**in**

**Original Suit No.311/2022**

**(CNR No.TNDG19-000734-2022)**

**----**

T. ஆனந்தவேல் ...... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. P. செல்லம்மாள்

2. சிவகாமி

3. மைனர். சனுசா

4. மைனர். நித்திலன்

(மேற்படி 3, 4 மைனர்களுக்கு அவர்களது அடுத்த சிநேகிதியும், தாயாருமான 2 ஆம் எதிர்மனுதாரர் என்பவர் மூலம்)

...... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது பழனி சார்பு நீதிமன்றத்தில் கடந்த 30.11.2021 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று பின்பு ஆள் எல்கை வரையறையின் காரணமாக மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் அவர்களின் அ.எண்.137/21/ஏ 1. தேதி: 15.12.2021 உத்தரவின்படி வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.311/2022–இல் இ.ம.எண்.341/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னர் கடந்த **14.03.2023–ஆம்** தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சரவணமுத்து அவர்கள் முன்னிலையாகியும், 3,4 மைனர் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற காப்பாளர் திருK.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினரான நிலையில் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு

இன்று இந்நீதிமன்றம் வழங்கலான,

**<u>உத்தரவு</u>**

**1.** மனு அட்டவணை சொத்துக்களை தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்ய உத்தரவிட கோரி இந்த மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 38, விதி 5 –இன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம். :–</u>**

1 ஆம் எதிர்மனுதாரரின் மகனும், 2 ஆம் எதிர்மனுதாரரின் கணவரும், 3, 4 எதிர்மனுதாரர்களின் தந்தையுமான P.சுப்பிரமணி, மனுதாரரிடம் பிராமிசரி நோட்டின்பேரில் ரூ.4,50,000/– கடன் பெற்றுக்கொண்டு திருப்பி செலுத்தாமல் அவரது சொத்துக்களை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் எதிர்மனுதாரர்களை அவரது வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதால் மனுதாரர் இந்த எதிர்மனுதாரர்கள் மீது மேற்படி பிராமிசரி நோட்டின்பேரில் வர வேண்டிய கடன் தொகை ரூ.5,41,500/–ம் பின்வட்டியும், கோர்ட் செலவும் வசூல் செய்ய வேண்டி பிராது தாக்கல் செய்துள்ளதாகவும், தன்னிடம் பி.சுப்பிரமணி தாவா கடன் பெற்றுள்ள விபரம் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு நன்கு தெரியும் என்ற நிலையிலும், தன்னிடமிருந்து பெற்ற தாவா கடன் தொகையில் எதிர்மனுதாரர்களும் பயனடைந்தவர்கள் என்ற முறையிலும் இறந்துபோன பி.சுப்பிரமணியின் சொத்துக்களை அடைந்து எதிர்மனுதாரர்கள் அடைந்து அனுபவித்து வரும் நிலையில் தாவா சொத்துக்களிலிருந்து தாவா கடனை எதிர்மனுதாரர்கள் செலுத்திவைக்க கடமைப்பட்டவர்கள் என்பதாலும், 3, 4 எதிர்மனுதாரர்கள் இளவர்கள் என்ற நிலையில் 2 ஆம் எதிர்மனுதாரரை மனுதாரர் நேரில் அணுகி தாவா பிராமிசரி நோட்டிற்குண்டான துகை வகையறாவைசெலுத்தி வைக்கும்படி கேட்டதில் அவரும் செலுத்தி வைப்பதாகவே கூறி செலுத்தாமல் வீண் காலம் கடத்தி வந்ததாகவும், எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் கடனை ஏமாற்றிவிட்டு மனுச்சொத்துக்களை வேறு மூன்றாம் நபர்களுக்கு கிரையம் செய்துவிட்டு மனுதாரரின் கடனை ஏமாற்ற முயற்சிக்கிறார் என்றும், மேற்படி விபரம் மூன்றாம் நபர்கள் மூலம் மனுதாரருக்கு

தெரிய வந்ததாகவும், இறந்துபோன பி.சுப்பிரமணிக்கு மனுச்சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றும், எதிர்மனுதாரர்கள் மனுச்சொத்தை கிரையம் செய்துவிட்டால் மனுதாரரால் தாவா கடனை வசூல் செய்ய இயலாமல் போய்விடும் என்றும், மனுச்சொத்துக்களை தீர்ப்பிற்கு முன்பு உடன் பற்றுகை செய்தால்தான் வழக்கு கடனை வசூல் செய்ய இயலும் என்றும், எனவே எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுவில் கண்ட சொத்தை தீர்ப்பிற்கு முன்பு உடன் பற்றுகை செய்து உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனு உரையின் சுருக்கம்:**

இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல மற்றும் நிலைக்கத்தக்கதல்ல எனவும், இந்த எதிர்மனுதாரர்களால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், இந்த மைனர் பிரதிவாதிகளுக்காக எந்தவித தொகையும் அவரது தகப்பனாரால் வாங்கப்படவில்லை. மைனர் நலனுக்காக அந்த தொகை செலவிடப்படவும் இல்லை என்றும், மைனர் பிரதிவாதிகளின் தந்தை உயிருடன் இருக்கும்போது தொகை சம்பந்தமாகவோ, பிராமிசரி நோட்டு சம்பந்தமாகவோ மைனரின் நலனுக்காக எந்தவித தொகையும் பெறப்பட்டதாக மைனரிடமோ, அவரது குடும்பத்தாரிடமோ தகவலை தெரிவிக்கவில்லை என்றும், அவர் இறந்தபிறகு வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய்யான சங்கதிகள் என்றும், தாவா தொகையை செலுத்தி வைக்க இந்த மைனர் பிரதிவாதிகள் கடமைப்பட்டவர் அல்ல என்றும், மைனர்களுக்கு எதிராக எந்தவித பரிகாரமும் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றும், இந்த மைன 3, 4 பிரதிவாதிகள் எவ்வித தொகையும் வாதிக்கு செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல என்றும், இந்த மைனர்களுக்கு எதிராக எந்தவித பரிகாரமும் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனு அட்டவணை சொத்தை தீர்ப்பிற்கு முன் ஜப்தி செய்து உத்தரவிடலாமா? என்பதே ஆகும்.

**5.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. பிரச்சனைக்குரிய தீர்வு :–

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் இறந்துபோன பி.சுப்பிரமணி பெற்ற கடனுறுதிச்சீட்டின்பேரிலான பணத்தொகையை மீட்டளிக்க கோரி அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் மீது தாக்கல் செய்துள்ளார். இறந்துபோன பி.சுப்பிரமணி, மனுதாரரிடம் கடன் தொகை ரூ.5,00,000/– பெற்றுக்கொண்டு அதற்கு ஆண்டிற்கு 12% வட்டி தொகையுடன் திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டு அதே தேதியன்று கடனுறுதிச்சீட்டை நிறைவேற்றினார் என மனுதாரர் தமது பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ளார். மேலும் அதற்கு ஆதரவாக 01.03.2020 ஆம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டின் அசலை தாக்கல் செய்துள்ளார். சுப்பிரமணி தாவா கடன் பெற்றுள்ள விபரம் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு நன்கு தெரியும் என்றும், சுப்பிரமணி எதிர்மனுதாரர்களை அவரது சொத்துக்களை பொறுத்து எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துபோய்விட்டார் என்றும், எதிர்மனுதாரர், இறந்துபோன சுப்பிரமணியின் சொத்துக்களை அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், மனுதாரர் தரப்பில் 01.03.2020 ஆம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டின் அசலை தாக்கல் செய்துள்ளார். மேற்படி கடனுறுதிச்சீட்டினை பரிசீலிக்கையில் மனுதாரரின் வாக்குமூலத்தை உறுதி செய்கிறது. எனவே இறந்துபோன சுப்பிரமணி கடன் தொகை ரூ.5,00,000/–யை மனுதாரரிடம் பெற்றுள்ளார் என்பதற்கு மனுதாரர்தரப்பு சான்றுகளில் முதல்நோக்கு ஆதாரம் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**7.** மனு அட்டவணை சொத்துக்கள் இறந்துபோன சுப்பிரமணிக்கு சொந்தமானது, அதை சுப்பிரமணி இறந்த பின்பு எதிர்மனுதாரர்கள் இறந்துபோன சுப்பிரமணியின் வாரிசுகள் என்ற அடிப்படையில் மனு அட்டவணை சொத்துக்களை அடைந்து அனுபவித்து வந்து அதை எதிர்மனுதாரர்கள் பராதீனம் செய்ய முயன்றார்கள் என மனுதாரர் தமது பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ளார். அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.8 கிரையப்பத்திரங்கள் மற்றும் கணினிப்பட்டா தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.7 ஆனது மனு அட்டவணை சொத்துக்களுக்கான வில்லங்கச்சான்றிதழ் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களை பரிசீலிக்கையில் மனு அட்டவணை சொத்துக்கள் எதிர்மனுதாரர்களுக்கு இறந்துபோன சுப்பிரமணியின் சொத்துக்கள் வாரிசுகள் என்ற அடிப்படையில் கிடைக்கப்பெற்று அனுபவித்து வந்து பராதீனம் செய்ய முயன்று வருகிறார்கள் என்று இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. ஆகவே எதிர்மனுதாரர்கள் அசல்வழக்கில் பிறப்பிக்கப்படலாகும் தீர்ப்பாணையின் நிறைவேற்றத்தை தடங்கல் அல்லது தாமதப்படுத்தும் நோக்கத்தோடு மனு அட்டவணை சொத்துக்களை பராதீனம் செய்ய முயற்சித்து வருகிறார்கள் என்பதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. எனவே மனு அட்டவணை சொத்துக்களை தீர்ப்பிற்கு முன் பற்றுகை செய்வது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து இவ்வாறு இப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

**8.** இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனு அட்டவணை சொத்துக்களை தீர்ப்பிற்கு முன் பற்றுகை செய்ய உத்தரவிடப்படுகிறது. பற்றுகை படி செலுத்த மூன்று நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகிறது. அழைக்க நாள் 09.06.2023. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2023–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள்** என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2023.04.06 18:56:30 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

**9. மனுதாரர்தரப்பு சாட்சியம் –இல்லை**

**10. மனுதாரர்தரப்பு சான்றாவணங்கள் –**

| வ.எண். | நாள் | ஆவண விபரம் |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 06.07.2021 | கிரைய ஆவணத்தின் சான்று நகல் (ஆவண எண்.1452/2021) |
| ம.சா.ஆ.2 | 06.07.2021 | கிரைய ஆவணத்தின் சான்று நகல் (ஆவண எண்.1453/2021) |
| ம.சா.ஆ.3 | 13.07.2021 | கிரைய ஆவணத்தின் சான்று நகல் (ஆவண எண்.1528/2021) |
| ம.சா.ஆ.4 | 19.06.2000 | கிரைய ஆவணத்தின் சான்று நகல் (ஆவண எண்.1002/2000) |
| ம.சா.ஆ.5 | 12.06.2006 | கிரைய ஆவணத்தின் சான்று நகல் (ஆவண எண்.1002/2006) |
| ம.சா.ஆ.6 | 06.10.2015 | ஈடு ஆவணத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.7 | -- | வில்லங்க சான்றுகள் (இரண்டு எண்ணிக்கை) |
| ம.சா.ஆ.8 | 29.11.2021 | பட்டா எண்.382 என குறிப்பிட்ட கணினிப்பட்டா |

**11. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் :–இல்லை**

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2023.04.06 18:56:35 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

I.A.No.341/2022 in
O.S.No.311/2022
Sub Court, Oddanchatram.
06.04.2023
Order (Fair/Draft)